முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை:– திரு.ஏ.கே.மெஹ்பூப் அலி கான், **B.L.M., L. L.M., P.G.D.PM/IR, Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.

2026 ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ம் நாள் புதன்கிழமை

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 18 ம் நாள் புதன்கிழமை**

**I.D.O.P.No.74/2025**

**CNR.No.TNRM01-003173-2025**

S. சசிகலன் ... மனுதாரர்

/எதிர்/

M. ஜோஸ் மிர்ஷா ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இறுதியாக என் முன்னர் 26.03.2023–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.மரிய லியோன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் M.ஆரோக்கிய ரீகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்..

**உ த் த ர வு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவகாரத்து சட்டம் பிரிவு 10(1)(x) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.04.01 18:53:25 +0530

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

**2.1.** மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024ம் தேதியன்று இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு 4-3/4 பவுன் தாலி செயின், 1-1/2 பவுன் செயின், 3 கிராம் செயின், 4 கிராம் நிச்சய மோதிரம் ஆக மொத்தம் 7-1/2 பவுன் நகை கொடுத்துள்ளார். திருமண வரவேற்பு ரோச்மாநகரில் உள்ள மனுதாரரின் இல்லத்தில் வைத்து நடைபெற்றுள்ளது. திருமணத்திற்கு முன் 12.01.2024ம் தேதி சுமார் இரவு 8.30 மணியளவில் மனுதாரருடைய தந்தை உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்ற செய்தியை எதிர்மனுதாரரிடமும் அவரது குடும்பத்தாரிடம் சொன்னபோது எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் மனுதாரரை மிரட்டி திருமணத்தை முடித்துள்ளதாகவும், அதன் பின்னர் திருமணம் முடிந்து இரண்டு நாள் கழித்து ஈமைக்காரியம் செய்து முடித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

**2.2.** எதிர்மனுதாரர் மனுதாரரின் துக்கத்தில் பங்கு கொள்ளாமல் அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், மனுதாரர் தனது தந்தையின் 40ம் நாள் காரியம் முடிந்த பிறகு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடிவெடுத்து எதிர்மனுதாரரை மனுதாரரின் வீட்டிற்கு அழைத்து வந்த முதல்நாளிலேயே மனுதாரருடன் வாழப்பிடிக்கவில்லை என்றும் தனது விருப்பத்திற்கு எதிராக மனுதாரருக்கு தன்னை திருமணம் செய்து வைத்ததாகவும் கூறியுள்ளார். அதன்பின்னர் பெரியோர்கள் அறிவுறுத்தலின் பேரில் இருவரும் சந்தோசமாக குடும்பம் நடத்தி

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:53:37 +0530

வந்த நிலையில், எதிர்மனுதாரர் மனுதாரரை அடிமைபோல் நடத்தியும், அவரது தாயாருக்கு மருமகள் என்ற முறையில் எந்தவித பணிவிடைகளையும் செய்யாமல் இருந்து வந்ததை மனுதாரர் கேட்டதற்கு மனுதாரருடன் சண்டையிட்டு அவரது தாயார் வீட்டிற்கு செல்வதையே வாடிக்கையாக வைத்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர் அடிக்கடி அதிகநேரம் தொலைபேசியில் பேசுவதும் வேறு ஒரு நபருடன் தவறான தொடர்பிலும் இருந்துள்ளார்.

**2.3.** அதன்பின்னர் மனுதாரர் 08.03.2024 ம் தேதி வெளிநாடு சென்றபின்னர் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு போனில் தொடர்பு கொண்டபோது அவரது அழைப்பை எடுக்காமல் அழைக்கழித்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 01.05.2025 ம் தேதி மனுதாரர் வெளிநாட்டிலிருந்து அவரது சொந்த ஊருக்கு வந்து மனுதாரர் வீட்டில் பார்த்தபோது எதிர்மனுதாரர் இல்லை என்பதை அறிந்து மிகுந்த வேதனைக்குள்ளாகிய மனுதாரர் எதிர்மனுதாரரை அவரது வீட்டிற்கு சென்று அழைத்தபோது வரமறுத்ததால் பெரியோர்களை வைத்து பேசி அதன்பின்னர் அவரது வீட்டிற்கு அழைத்து வந்துள்ளார். அங்கு வந்த எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்த வாழாமல் அவரது உறவுக்கார பையனிடம் தவறாக இருந்ததை மனுதாரர் பார்த்து மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். அதன்பின்னர் எதிர்மனுதாரர் மீண்டும் மனுதாரருடன் சண்டையிட்டுஅவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார். திருமணத்தின்போது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அணிவித்த நகைகள் அனைத்தும் எதிர்மனுதாரர் வசமே உள்ளது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:53:41 +0530

**2.4.** கடந்த 12.05.2024ம் தேதி மனுதாரர் வீட்டில் இருந்தபோது எதிர்மனுதாரரின் உறவினர்கள் மூன்று பெரிய வேனில் ஆட்களுடன் கம்பு, கம்பியுடன் மனுதாரரின் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து தகாத வார்த்தைகளில் பேசி கலவரம் செய்தும், மனுதாரரையும் அவரது வயதான தாயாரையும் கீழே தள்ளிவிட்டு அடித்தும் சென்றுள்ளனர். மேற்படி எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரும் மனுதாரருக்கு மனதளவிலும் உடலளவிலும் கொடுமைகளை செய்து வந்துள்ளனர்.

**2.5.** எதிர்மனுதாரர் திருமணமான நாள் முதல் ஒரு மனைவி என்ற முறையில் மனுதாரருக்கு எவ்வித அடிப்படைத் தேவைகளை செய்யாமலும், வேறு ஒரு நபருடன் தவறான முறையில் உறவு வைத்துக்கொண்டும், மனுதாரரை எதிர்மனுதாரர் அவரது உறவுக்காரர்களை வைத்து அடித்து கொடுமைப்படுத்தியும், குடும்ப உறவில் நாட்டமில்லாமல் கடந்த 1 1/2 வருடங்களுக்கும் மேலாக எதிர்மனுதாரர் தனது பெற்றோர் வீட்டில் இருந்து வரும் நிலையில் சேர்ந்து வாழ எவ்வித முயற்சிகள் மேற்கொள்ளாமல் மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தி வருவதாலும், இனிமேல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024ம் தேதி பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:53:46 +0530

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

**3.1.** மனுதாரரின் மனுவில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர்த்து மற்றவற்றை மனுதாரரே சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024ம் தேதி பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மற்றவைகள் அனைத்தும் எதிர்மனுதாரரால் மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரரின் தகப்பனார் இறந்துவிட்டார் என்ற தகவல் எதிர்மனுதாரரின் வீட்டாருக்கு தெரிவிக்கப்பட்டபோது அவர்கள் திருமணத்தை தள்ளி வைத்துக்கொள்ளலாம் என மனுதாரரிடம் கேட்டதற்கு மனுதாரர் குடும்பத்தினர் திருமணத்தை முடித்துவிட்டு அவரது தந்தையின் இறுதி சடங்கை முடித்துவிடுவதாக கூறி திருமணம் முடிந்த பின்னர் எதிர்மனுதாரரை அவரது சித்தி வீட்டில் விட்டு சென்றுள்ளார்.

**3.2.** உண்மையில், எதிர்மனுதாரரை மனுதாரர் அவரது வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் செய்யச் சொல்லி கொடுமைப்படுத்தியதாகவும், மேலும் மனுதாரர் திருமணத்திற்காக கடன் வாங்கியிருப்பதாகவும், அதனை திருப்பி செலுத்துவதற்கு எதிர்மனுதாரருக்கு அணிவித்த 22 பவுன் நகைகளை கடந்த 21.01.2024ம் தேதியன்று ரூ.4,30,000/-ற்கும், அதன்பின்னர் கடந்த 29.01.2024ம் தேதியன்று ரூ.1,82,000/-ற்கும் அடகு வைத்து பணத்தை பெற்ற பின்னர் மனுதாரர் எந்தவேலைக்கும் செல்லாமல் தான்தோன்றித்தனமாக இருந்ததுடன், தினமும் குடித்துவிட்டு வந்து எதிர்மனுதாரருடன்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:53:51 +0530

சண்டைபோட்டு அவரை அடித்து மிகவும் கொடுமைப்படுத்தியதாகவும், மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் யாரிடமும் போனில் பேசக்கூடாது என மிரட்டியுள்ளதால் எதிர்மனுதாரர் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்.

**3.3.** இந்நிலையில், மனுதாரர் கடந்த 08.03.2024 ம் தேதியன்று வெளிநாட்டிற்கு கடல் தொழிலுக்காக செல்வதற்கு ரூ.70,000/- தேவைப்படுவதாக கூறி எதிர்மனுதாரரை அவரது பெற்றோரிடம் பணம் வாங்கி வரச்சொல்லி வெளிநாட்டிற்கு சென்றுள்ளார். அதன்பின்னர் எதிர்மனுதாரரிடம் எந்தஒரு தகவலும் சொல்லாமல் கடந்த 02.05.2024 ம் தேதியன்று எதிர்மனுதாரரிடம் எந்த தகவலும் சொல்லாமல் ஊருக்கு வந்த மனுதாரர் எதிர்மனுதாரரை சந்தேகப்படுவதும், அடிப்பதும் என மிகவும் கொடுமைப்படுத்தி வந்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் அணிவித்த 22 பவுன் தங்க நகைகளை திருப்பி கொடுக்குமாறு கேட்டதற்கு அடித்தும், தகாத வார்த்தைகளால் பேசி கொடுமைப்படுத்தியும், கூடுதலாக ரூ.5 லட்சம் வரதட்சனை கேட்டு எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களிடம் பிரச்சனை செய்துள்ளார்.

**3.4.** இவ்வாறான சூழ்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் குடும்ப உறவில் இருந்தபோது எதிர்மனுதாரருக்கு தெரியாமல் புகைப்படம் எடுத்து வைத்திருப்பதாகவும், அதனை Facebook-ல் போட்டு எதிர்மனுதாரரை அசிங்கப்படுத்திவிடுவதாகவும் கூறி எதிர்மனுதாரரை மனுதாரர் மிரட்டியதால் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது கடந்த 16.05.2024 ம் தேதியன்று இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்ததன் பேரில் ஆஜரான

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:53:56 +0530

மனுதாரர் 4 மாத காலத்திற்குள் எதிர்மனுதாரரின் நகைகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களையும் திருப்பி செலுத்திவிடுவதாகவும், எதிர்மனுதாரருடன் சேர்ந்த வாழ விருப்பமில்லை என்றும் கூறி சென்றுள்ளார். அதன்பின்னர் கடந்த 03.06.2024 ம் தேதியன்று எதிர்மனுதாரரின் சீர்வரிசைப் பொருட்களை மட்டுமே அனுப்பி வைத்த மனுதாரர் மனுதாரரின் நகைகள் 22 பவுன் மற்றும் பணம் ரூ.50,000/–த்தை திருப்பி செலுத்தாமல் அதற்கு பதிலாக ரூ. 7,00,000/–த்தை தருவதாகவும் கூறிய பின்னர் கடந்த 10.12.2024 ம் தேதியன்று மனுதாரரின் சகோதரர் அந்தோணி ராயப்பன் என்பவர் இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து மனுதாரர் கொடுத்ததாக எதிர்மனுதாரரிடம் ரூ.50,000/– கொடுத்துவிட்டு மீதப்பணம் ரூ.7,00,000/–ஐ ஓரிரு நாட்களுக்குள் கொடுத்துவிடுவதாகவும் கூறிச்சென்றுள்ளார்.

**3.5.** எதிர்மனுதாரர் தங்கச்சிமடம் அன்னை கொலாஸ்டிகா கல்லூரிக்குச் செல்லும்போது மனுதாரர் எதிர்மனுதாரரைப் பின் தொடர்ந்து வருவதும், அசிங்கமாகப் பேசுவதும், மனுதாரரின் குடும்பத்தினர் எதிர்மனுதாரரைப் பற்றி பிறரிடம் தவறான பெண் என்று வீண் பிரஸ்தாபம் செய்து வருவதுமாக இருந்து வந்துள்ளதால் எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கடந்த 10.01.2025 ம் தேதியன்று இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் கடந்த 16.01.2025 ம் தேதியன்று ஆஜரான மனுதாரர் 10.04.2025 ம் தேதியன்று ரூ.7,00,000/– கொடுத்து விடுவதாகவும், எதிர்மனுதாரருடனோ அவரது குடும்பத்தினருடனோ எந்தவித பிரச்சனையும் செய்யமாட்டேன் என உறுதியளித்து எழுதிக் கொடுத்து சென்றபின்னர் மீண்டும் தொந்தரவு செய்வதுடன் மிரட்டலும் விடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:00 +0530

**3.6.** ஆனால் எதிர்மனுதாரர் இராமேஸ்வரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறையில் இருந்து பெண்கள் பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் கடந்த 21.08.2025ம் தேதியன்று மனு தாக்கல் செய்து அந்த மனு எண். D.V.No.8/2025 வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும், மேலும் மனுதாரர் உண்மையை மறைத்து பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மன உளைச்சலுக்கு ஆளான எதிர்மனுதாரர் இனிமேல் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறி, மனுதாரர் கோரிய விவாகரத்து வழங்குவதில் எதிர்மனுதாரருக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4.** மனுதாரர் தரப்பில், மனுதார் சசிகலன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதார் ஜோஸ் மிஸ்ரா எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>

மனுதாரர் மனுவில் கோரியுள்ளது போல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவகாரத்து சட்டம் பிரிவு 10(1)(x) ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:04 +0530

அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**:–

**6.** மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. கடந்த 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவகாரத்து சட்டம் பிரிவு 10(1)(x) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** இம்மனுவில் உள்ள மனுதாரர் சசிகலன் என்பவர் மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தில், தனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணம் நடைபெற்றதற்கான திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி திருமணத்தை பதிவு செய்தததற்கான பதிவுச் சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

**8.** மேற்படி மனுதாரரின் பிரமான வாக்குமூலத்தின் படி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:08 +0530

வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் பெரியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது என்பது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ன் படி இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. மேலும் திருமணமானது கடந்த 27.06.2024 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் திருமணமான நாள் முதலில் இருந்து எதிர்மனுதாரர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் தன்னை மனதளவில் மிகுந்த வேதனைப்படுத்தியதாகவும், மேலும் மனுதாரர் மற்றும் அவரது தயாரையும் தகாத வார்த்தைகளால் பேசி எந்தஒரு வேலையும் செய்யாமல் அடிக்கடி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று மனுதாரரை பிரிந்தும், வேறு ஒரு ஆண் நபருடன் தொடர்பு வைத்துக்கொண்டு மனுதாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளார். மேலும் கடந்த 1–1/2 வருடத்திற்கும் மேலாக மனுதாரரை விட்டு எதிர்மனுதாரர் பிரிந்து அவரது பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருவதாலும், இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றும், எனவே தங்களுக்குள் ஏற்பட்ட திருமண உறவை ரத்து செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**9.** மேற்படி மனுதாரரின் கூற்றை மறுத்து எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது, தனக்கும், மனுதாரருக்கும் திருமணம் முடிந்து நல்லமுறையில் வாழ்ந்து வந்த நிலையில், மனுதாரர் அவரது பெற்றோர்களின் துர்போதனையினால் அடிக்கடி சண்டையிட்டு அடித்து கொடுமைப்படுத்தியும், எதிர்மனுதாரரின் நகைகளை அடகு வைத்து எந்தஒரு வேலைக்கும் செல்லாமல் தான்தோன்றித்தனமாக இருந்தும், தினமும் குடித்துவிட்டு வந்து அடித்து கொடுமைப்படுத்தியதால் இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:14 +0530

நிலையத்தில் புகார் அளித்ததாகவும், அதன் பேரில் மனுதாரரை அழைத்து பேசியபோது எதிர்மனுதாரரின் நகைகள் 22 பவுனிற்கு பதிலாக ரூ.7,00,000/– த்தை தருவதாகவும் கூறிச் சென்றுள்ளார் என்பது எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

**10.** மேலும் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று மனுதாரரை பிரிந்து வேறு ஒரு ஆண் நபருடன் பழகிக்கொண்டு மனுதாரரை மனதளவில் வேதனைப்படுத்தியதாகவும், எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்காக பல பொய்யான காரணங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரரின் செய்கையால் தான் மனதளவில் பாதிப்படைந்துள்ளதாகவும், திருமணம் முடிந்து சிறிது காலம் மட்டும் சேர்ந்து வாழ்ந்து வந்த நிலையில், தற்போது வரை கடந்த 1–1/2 வருடத்திற்கும் மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், எனவே எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தனக்கு விரும்பம் இல்லை என்றும் கூறியுள்ளார்.

**11.** மேற்படி மனுதாரரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, திருமணமாகி சிறிது காலங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பது அவர்களது சாட்சியங்களிலிருந்து தெரியவருகிறது. இருப்பினும் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களின் துர்போதனைகளை கேட்டு மனுதாரரை மிகவும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், அடித்தும் மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தியுள்ளார் என்பதாலும், அதனால்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:17 +0530

இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதனால் தான் பிரிந்து வாழ்ந்து வருவதாக மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். ஆனால் மனுதாரர் தரப்பு சங்கதியை மறுத்து எதிர்மனுதாரர் தனது சாட்சியத்தில் திருமணத்திற்கு சில மாதங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்து அதன்பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் தற்போது வரை பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தான் மனுதாரருடன் சேர்ந்த வாழ விருப்பமில்லை என்றும் அதனடிப்படையில் விவாகரத்து வழங்குவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**12.** இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரும் 1–1/2 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து வாழ்ந்து வருவதாலும், இனி சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதாலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமண பந்தத்திலிருந்து பிரிந்து கொள்வதை தவிர மனுதாரருக்கு வேறு வழியில்லை என்பதாலும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடவேண்டுமென்று கோரியுள்ளார்.

**13.** எனவே மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள கூற்றுக்களையும், சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விஷயங்களையும் கருத்தில் கொண்டும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 1–1/2 ஆண்டுகளுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருகின்ற நிலையிலும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் இனியும் சேர்ந்து வாழ இயலாது என்று

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:25 +0530

இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுதாரர் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 13.01.2024 ம் தேதியன்று பாம்பன் தூய புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிட வேண்டுமென்று கோரி விவாகரத்து சட்டம் பிரிவு 10(1) மற்றும் உட்பிரிவு **X**–ன் கீழ் விவாகரத்துப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:29 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :–

ம.சா.1 சசிகலன்

TNRM010031732025



**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.01.2024 | திருமண அழைப்பிதழ் -அசல் |
| ம.சா.ஆ.2 | 27.06.2024 | மேற்படி திருமணத்தை பதிவு செய்ததற்கான திருமண பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு:-**

எ.ம.சா.1 ஜேம்ஸ் மிர்ஷா

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:-**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 16.05.2024 | எதிர்மனுதாரர் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாருக்கு அவர்கள் வழங்கிய ரசீது ஜெராக்ஸ் நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 17.01.2025 | எதிர்மனுதாரர் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாருக்கு அவர்கள் வழங்கிய ரசீது |
| எ.ம.சா.ஆ.4 | 10.01.2025 | எதிர்மனுதாரர் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு ஜெராக்ஸ் நகல் |

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.01 18:54:36 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.